**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 18.03.2026**
**OS. No. 229/2013**
**வழக்கு சாட்சி DW.1– நல்லதம்பி, த/பெ.ராமசாமி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

8) நான் CS மணியிடம் வீடு வாங்கிய போது கீழ் தளம் கான்கிரீட் போடப்பட்டு, மேல்தளம் கான்கிரீட் போடாமல் இருந்தது. நான் கட்டி முடிக்காத நிலையில் வீட்டை வாங்கி நான் தான் அதை கட்டினேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.337/2015 என்ற வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நாங்கள் CS மணியிடம் கிரையம் பெற்ற ஆவணத்தில் பாதை குறித்து ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தெற்குபக்கம் மெயின் ரோடு என்றும், வடக்கு பக்கம் பட்டா நிலத்திற்கு வெளியே சானிட்டரி சந்து என்றும், அதை நாங்கள் நடைபாதையாக பயன்படுத்தி வருகிறோம்.

9) வாதி வீட்டிற்கும், எங்களுடைய வீட்டிற்கும் இடையே சந்து உள்ளதா என்றால் சந்து இல்லை, வாதி எங்களுடைய ஒரு அடி நிலத்தை ஆக்கிரமித்து கட்டிக்கொண்டார். வாதி CS மணி உள்ளபோதும், நான் கிரையம் பெற்ற பிறகும் தனது சொத்தில் ஏதேனும் கட்டிடம் கட்டியுள்ளாரா என்றால் இல்லை, நான் கிரையம் பெற்றபிறகு தெற்குபக்கம் ஒரு அடி நிலத்தை அவருடைய சுவருடன் சேர்த்து சுவர் எழுப்பியுள்ளார். நான் வாதியின் வீட்டிற்கு கிழக்கு பக்கம் குடியுள்ளேன். எனக்கும், தெற்கு பக்கத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரிதான். ஆனால் அது மெயின் ரோடு ஆகும். (சாட்சி தற்போது வாதி ஒரு அடி சுவரானது வாதியின் வீட்டிற்கு கிழக்குபக்கம் கட்டியுள்ளதாக கூறுகிறார்).

10) வாதி வீட்டிற்கும், எங்களுடைய வீட்டிற்கும் இடையே சானிட்டரி சந்து உள்ளதா என்றால் சந்து இல்லை, என்னுடைய பட்டா நிலத்திற்கு கிழக்குபக்கத்தில் வடக்குபுறமாக செல்கிறது. எங்களுடைய வீட்டிற்கு பின்புறத்தில் சானிட்டரி சந்து

உள்ளதா என்றால் இல்லை. (சாட்சி தற்போது தன் வீட்டிற்கு பின்னால் சானிட்டரி சந்து உள்ளது என்று சொல்கிறார்). என் வீட்டின் பின்புறம் ஒட்டியே தெற்குபுறத்திலிருந்து வடக்குபுறம் மேற்கண்ட சானிட்டரி சந்து செல்கிறது. சானிட்டரி சந்து என் வீட்டிற்கு கிழக்கு மேற்காக செல்லவில்லை என்றால் சரிதான். என் வீட்டிற்கும், 3ம் பிரதிவாதி கோபால் வீட்டிற்கும் நடுவில் தான் சானிட்டரி சந்து செல்கிறதா என்றால் ஆமாம். மேற்கண்ட சானிட்டரி சந்தானது சுமார் 6 அடி அகலமும், 1 மீட்டர் நீளமும் இருக்கலாம். அந்த சானிட்டரி சந்து வழியாக நாங்கள் தாண்டவன் சந்தை சென்றடையலாம் என்றால் சரிதான்.

11) மேற்கண்ட சானிட்டரி சந்தை ஒட்டினார் போல் என்னுடைய நிலத்தில் சுமார் 70 சதுரடி காலி நிலம் உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிலிருந்து தாண்டவன் தெரு செல்வதற்கு வடக்குபக்கம் எனக்கு வழி உள்ளது என்றால் சரிதான். வாதி வீட்டிற்கு பின்புறமுள்ள அப்பு என்பவரின் காலி நிலம் வழியாக அவர் தாண்டவன் தெருவை சென்றடைவார் என்றால் சரிதான். வாதி வீட்டிற்கும், என் வீட்டிற்கும் இடையே காலி நிலம் உள்ளது என்றும், அதை இன்னும் அடைக்கவில்லை என்றால் சரிதான், அது என்னுடைய பட்டா நிலம் ஆகும். அந்த காலி நிலம் என்னுடையது இல்லை என்றும், என்னுடைய நிலம் முழுவதிலும் நான் வீடு கட்டிவிட்டேன் என்றால் சரியல்ல.

12) என் வீட்டிற்கும், வாதியின் வீட்டிற்கும் இடையே காலி நிலம் முழுவதும் வாதி தனது வீட்டின் ஆஸ்பெட்டாஸ் சீட் நீட்டியுள்ளார் என்றால் சரிதான். வாதி அந்த காலி நிலத்தின் வழியாக சென்று அப்பு நிலத்தை அடைந்து அதிலிருந்து தாண்வன் தெருவை சென்றடைவார் என்றால் சரியல்ல. இது தொடர்பாக சண்டை வந்ததால் தான் CS மணிக்கும் அவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு, CS மணி கட்டிடம் கட்டாமல் இருந்தார் என்றும், அவர் என் கடையில் அமர்ந்து தான் அந்த வீட்டின் கட்டிட பணிகளை பார்த்து வந்தார் என்றும், அந்த விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும் என்றும், ஆனால் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

13) நான் 2011ல் அந்த வீட்டை கிரையம் பெற்றேன். 2013ல் பட்டா பெற்ற பிறகு கட்டிடம் கட்டினேன். என் வீட்டில் ஏதேனும் சன் சிலைட் நீட்டி பொறுத்தப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் வீட்டிற்கு பின்பக்கம் ஜன்னல் வைத்துள்ளோம், அது திறக்கும் நிலையில் தான் உள்ளது. சன்சிலைடு அமைப்பதற்காக நான் கம்பிகளை என் வீட்டில் நீட்டி அமைத்த போது வாதி என் மீது இது தொடர்பாக புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், வாதி கொடுத்த புகாரின் பேரில் மனு ரசீது எண்.110/96, புகார் எண்.54/98 என்று வழங்கப்பட்டுள்ளது என்றும், நான் அதை பற்றி தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய வீட்டிலிருந்து 3ம் பிரதிவாதி வீட்டின் பக்கம் செல்வதற்கு தான் தடம் உள்ளது என்றும், அதன் வழியாகத்தான் நான் சென்று வருகிறேன் என்றும், அதையும் நாங்கள் தற்போது சேர்த்து கட்டிவிட்டோம் என்றால் சரியல்ல.

14) வாதி வீட்டின் பக்கம் செல்வதற்கு என்னுடைய நிலத்தில் நான் எந்த காலி இடமும் விடவில்லை என்றும் நான் வழக்கிற்காக விட்டதாக பொய்யாக சொல்கிறேன்எ ன்றால் சரியல்ல. நான் தான் வாதியின் நிலத்தில் 40 X 7 அடி ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளேன் என்றும், பிரச்சனை செய்த பிறகு நீட்டிவிட்ட ஜன்னல் மற்றும் கம்பிகளை அகற்றினேன் என்றால் சரியல்ல. வாதியின் வீட்டு பக்கம் என் வீட்டு ஜன்னல் மற்றும் சன்சிலைடு இல்லை என்றால் சரிதான். என்னுடைய நிலத்தில் 3 வீடுகள் உள்ளது. அந்த 3 வீட்டிற்கு தனி தனியாக மின் இணைப்பு உள்ளது, அதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

15) என் நிரூபண வாக்குமூலத்தில் 4வது ஆவணமாக குறியீடு செய்யப்பட்ட வாதியின் பெரியம்மா குப்பன் மனைவி சௌந்தரி பெயரில் வழங்கப்பட்ட கணினி பட்டா என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணமானது 21.09.1993ல் அரசால் வழங்கப்பட்ட பட்டாவாகும். அது வாதி பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பட்டாவில் சொத்துவிவரம் மற்றும் அளவுகள் மற்றும் வரைபடம் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது. வாதிக்கு அந்த

பட்டாவில் கண்ட சொத்து 1993 லேயே பட்டா வழங்கப்பட்டுவிட்டது என்றும், அதில் கண்ட அளவுகளில் வாதி தான் தற்போது வரை அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள நிலத்தில் 1986 ல் இருந்து வாதி தான்அனுபவத்தில் உள்ளார். வாதி பெயிண்டிங் வேலைக்கு செல்கிறார் என்றால் சரிதான். வாதி தன்னுடைய நிலத்தில் புதியதாக எந்த வீடும் கட்டவில்லை என்றால் சரிதான். வாதியின் வீட்டிற்கு இருபுறமும் தாண்டவன் தெரு செல்வதற்கு வழி உள்ளது என்றும், அதில் 7 X 40 அடி அளவில் நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் இல்லை.

16) எனது முந்தைய விற்பனையாளர் CS மணி நிலத்தை கிரையம் பெற்ற பிறகு தான் அவருக்கும், வாதிக்கும் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். CS மணி முதலில் 3 பட்டாக்கள் வாங்கி அதை இணைத்து ஒரே பட்டாவாக மாற்றிக்கொண்டார் என்றால் சரியல்ல. பட்டாப்படி எனக்கு 828.5 சதுரடி நிலம் உள்ளது. 20 X 40 அடி அளவில் தான் நான் வீடு கட்டியுள்ளேன். மீதி காலி நிலமானது எனது வீட்டிற்கு வடக்கு பக்கம் உள்ளது. பட்டாவில் உள்ள அளவு என்னுடைய கிரைய பத்திரத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், என் கிரைய பத்திரத்தில் 810 சதுரடி மட்டும் தான் உள்ளது என்றும், நான் தான் அதிக நிலத்தில் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் ஆக்கிரமித்த நிலத்தை அவருக்கு ஒப்படைக்க கடமைப்பட்டவர் என்றும், அவருடைய சொத்தை அவருக்கே கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.